DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.21**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கோபிக்கண்ணன் |
| Father Name | : | மகேந்திரன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

(3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது சர்வேயர் நகர், பாண்டியன் நகர் 8வது தெருவில் குடியிருக்கிறேன். நான் HR Recruiter ஆக வேலை பார்க்கிறேன். நான் வழக்கு சம்பவ சமயத்தில் தேவதாஸ் மருத்துவமனையில் Receptionist ஆக வேலை பார்த்தேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி இரவு 8 மணியளவில் நான் தேவதாஸ் மருத்துவமனையில் Receptionist ஆக வேலை பார்த்து வந்தேன் என்றும், அப்போது ராமகிருஷ்ணன் என்பவர் சிகிச்சைக்காக தேவதாஸ் மருத்துவமனையில் சேர்ந்தார் என்றும், பின்பு சிகிச்சை பெற்று வந்த

ராமகிருஷ்ணன் இரவு 12.30 மணியளவில் ஸ்கேன் எடுப்பதற்காக எங்கள் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், பின்பு அவர் திரும்ப வரவில்லை என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.